# தமிழ் இலக்கிய வளம்

தமிழ் மிகத் தொன்மையான மொழிகளில் ஒன்றாகும். தமிழ் தமிழரின் தாய் மொழியாகும். உலகின் முதன் மொழி தமிழே என்று மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் பல நூல்களைச் சுட்டிக்காட்டி அறிஞர்கள் முன்னிலையில் நிறுவியுள்ளார். இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் அதன் இனிமை கருதித் தேன்தமிழ் என்றும் அதன் இளமை கருதிப் பைந்தமிழ் என்றும் அதன் செம்மை கருதிச் செந்தமிழ் என்றும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இவற்றைவிடப் பல்வேறு வகையான சிறப்புப் பெயர்களையும் அறிஞர்கள் வழங்கியுள்ளனர்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்றினையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் தமிழ் முத்தமிழ் என்ற சிறப்பினையும் பெற்றுத் திகழ்கின்றது. பாடலாலும் உரைநடையாலும் ஆக்கப்பட்டுள்ளது இயற்றமிழ் என்றும் இசைப் பாடல்களால் ஆக்கப்பட்டுள்ளது இசைத்தமிழ் என்றும் இசையும் இயலும் கலந்து நடிப்பாலும் பேச்சாலும் கருத்துகளை வெளிப்படுத்துவது நாடகத் தமிழ் என்றும் அழைக்கப்படுகின்றது. தமிழில் உள்ள சொற்கள் உருவம் பருவம் ஆகிய இரண்டையும் ஒருங்கே காட்டும் தன்மை வாய்ந்தவை. கொழுந்து, தளிர், இலை, பழுப்பு, சருகு என இலையின் பவருத்தினையும் உருவத்தினையும் தமிழ் காட்டுகின்றது. இது எம் தமிழுக்குரிய சிறப்பாகும்.

தமிழர் உலக மக்கள் அனைவரையும் உறவினராகக் காணும் பெருந்தன்மை கொண்டவர்கள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கவிஞர் கணியன்பூங்குன்றனாரின் கவிதை அடி இதனைப் புலப்படுத்தி நிற்கின்றது. இத்தகைய அருந்தமிழைக் கழகங்கள் அமைத்து அக்கழகங்களில் சிறப்பு வாய்ந்த தமிழ்ப்புலவர்கள் கூடி இருந்து ஆய்வு செய்து வளர்த்தனர். முதற்கழகம் இடைக்கழகம், கடைக்கழகம் என மூன்று கழகங்கள்

அமைக்கப்பட்டிருந்தன. முதற் கழகங்களும் அவற்றுக்குரிய நூல்களும் கடற்கோளினால் அழிவுற்றன. அவற்றில் தொல்காப்பியம் ஒன்றே எமக்குக் கிடைத்த முதல் இலக்கண நூலாகும். இது ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியம் எனப் புகழப்படுகிறது.

கடைக்கழக நூல்களும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்கணக்கு நூல்களாகிய முப்பத்தாறு நூல்களே எமக்குக் கிடைத்துள்ளன. பொதுமறை என்று புகழப்படும் திருக்குறள் பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். ஐம்பெருங்காப்பியங்கள், தேவாரம், திருவாசகம் போன்ற சைவநெறி இலக்கியங்கள் வைணவ நெறிசார்ந்த திவ்வியப்பிரபந்தம், கிறித்தவ நெறி சார்ந்த தேம்பாவணி, இரட்சணியயாத்திரிகம் போன்ற இலக்கியங்களும் சீறாப்புராணம் போன்ற இசுலாமிய நெறி இலக்கியங்களும் தமிழில் எழுந்த இலக்கியங்களாகும். அனைத்துச் சமய நெறிகளுக்கும் இலக்கியம் படைத்த பெருமை எம் தமிழ் மொழிக்குண்டு. இவ் இலக்கியங்கள் தவிர தொண்ணூற்றாறுவகைச் சிற்றிலக்கியங்களும் சிறுகதை, நாடகம், புதுக்கவிதை என இன்னும் பல எண்ணற்ற இலக்கியங்களும் நிறைந்த எம் தமிழ்மொழி பல வளங்களையும் தன்னிடத்தில் கொண்டுள்ளது. இது எம்மொழிக்குச் சிறப்பாகும்.